**O.S.No.45/2022**

**Date:01.08.2024**

**வா.சா 1 பாத்துமுத்து பீவி**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.ஏ படித்துள்ளேன். பிரதிவாதிகள் எனது அப்பா மூலமாக எனக்கு தெரியும். எனது வீட்டில் வரவு செலவுகளை அப்பா தான் பார்த்து வருகிறார். பிரதிவாதிகள் எனது அப்பாவிடம் தான் பணம் வாங்கினார்கள் என்றால் என்னிடம் தான் பெற்றார்கள். பிரதிவாதிகள் 23.03.2015 என்னிடம் பணம்பெற்றார்கள். 2015 ல் எனக்கு வயது 21 ஆகும். தற்போது எனக்கு 30 ஆகிறது. முதல் விசாரணை சாட்சியத்தில் எனது வயது 27 உள்ளது தவறு என்றால் சரிதான். எனது அப்பா தனியார் வங்கியில் அப்ரைசராக உள்ளார். எனது அப்பா வட்டிக்கு பணம்கொடுக்கல் வாங்கல் செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வரவு செலவிற்கு உங்கள் அப்பாவிடம் தான் வந்தார்கள் பெயரளவில் தான் உங்கள் பெயரில் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ.4 லட்சம் பெற்றார்கள் மாதத்திற்கு வட்டி ரூ–100 க்கு 1 ஆகும். நான் இஸ்லாமிய சமுதாயத்தை பின்பற்றுபவர் என்றால் சரிதான். மத முறைப்படி பெண்கள் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் உங்களிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், பிரதிவாதிகள் உங்கள் அப்பாவிடம் பணத்தை கொடுத்துவிட்டார்கள் என்றாலும், உங்கள் அப்பாதான் செல்லடித்து போகாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. உங்கள் அப்பாவிடம் பணத்தை கொடுத்து விட்ட காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 2019 ஆண்டிலேயே உங்கள் அப்பாவிடம் பணத்தை செலுத்திவிட்டார்கள் என்றாலும், இந்த வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**